2012 மே 16]

திருநெல்வேலி கோட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு இயக்கி வருகின்றன. தவிரவும் அரசு ஆணை எண் 61, நாள் 9-4-1992-இன்படி இரு பணிமனைகளுக்கிடையே குறைந்தபட்சம் 40 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். தற்போதுள்ள பணிமனைகளுக்கிடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளதால், மேலும் ஒரு புதிய பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

247—

பணிமனை அமைத்தல்

வினா எண் 6185—திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம், தஞ்சாவூர், அரியலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பணிமனைகளிலிருந்து பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்பட்டு, திருக்காட்டுப்பள்ளியில் வாழும் மக்கள் அனைவருக்கும் பேருந்து வசதிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனவே, திருக்காட்டுப்பள்ளியில் புதிய பணிமனை அமைத்திடத் தேவையில்லை.

248—

பணிமனை அமைத்தல்

வினா எண் 6769—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, நாளிப்பாடி கிராமத்தில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாளிப்பாடி கிராமத்திற்கு திருவண்ணாமலையை மையமாக கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள தண்டராம்பட்டு வழியாக நாளிப்பாடிக்கு பொதுமக்கள் வசதிக்காக போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், தனியாக நாளிப்பாடியில் பணிமனை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

249—

ஊதிய நிர்ணயம்

வினா எண் 169—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தேயிலை மற்றும் காப்பித் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.300/- ஊதியம் நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 15-6-2008 முதல் அரசு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்துள்ளது. மேலும், தொழில்தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன்படி, கோவை தொழிலாளர் இணை ஆணையர் முன்னிலையில், 1-7-2001 ஆம் தேதியன்று ஆனைமலை தோட்ட அதிபர்கள் சங்கத்திற்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம், நீலகிரி தோட்ட அதிபர்கள் சங்கத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மற்றும்

2012 மே 16]

2-7-2011 ஆம் தேதியன்று நீலகிரி வயநாடு தோட்ட அதிபர்கள் சங்கத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ஆகியவற்றில், தோட்ட அதிபர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 16-6-2008 தேதியிட்ட அரசினால் பிறப்பிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய அரசாணையை அமலாக்கம் செய்வதற்கு இணையான, குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறைவில்லாமல் ஒருங்கிணைந்த நிகர சம்பளம், நிலையான அகவிலைப்படி மற்றும் இதரபடிகள் வழங்கவும், படிகள் (அலவன்ஸ்) என்ற பகுதியின்கீழ் வழங்கப்பட்டு வந்த தொகைக்கு பிராவிடண்ட் பண்ட், போனஸ் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களில் உட்படுத்தப்பட்டுள்ள விடுப்புப் பயன் ஆகியவற்றிற்கும் சேர்த்து 1-6-2011 முதல் வழங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொழிலுக்கு நான்கு ஆண்டுகளுக்கொருமுறை குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யும் முறை இருந்து வருவதால், 16-6-2012-க்குப் பிறகுதான் இத்தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படும்.

250—

தொழிற்சாலை இயக்குதல்

வினா எண் 172—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை, ஸ்ரீரங்கநாதன் வால்வ்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

ஸ்ரீரங்கநாதன் வால்வ்ஸ் பிரைவேட் லிமிடெட், 7/09 தென்னம்பாளையம் பிரிவு, அரசூர், கோயம்புத்தூர்-641 407 என்ற நிறுவனம், மொத்தம் 330 தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் கோவை மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்கம் (ஏஐடியுசி) செயல்பட்டு வருகிறது. ஏஐடியுசி சங்கத்தின் நிர்வாகிகள் ஐந்து பேரை நிர்வாகம் பணிநீக்கம்